மனனம் செய்ய இந்த வார வசனம்:

ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கின்றார்; தாழ்நிலையிலுள்ள அவர்களுக்கு வெற்றியளித்து மேன்மைப்படுத்துவார்.

(திருப்பாடல்: 149:4)

இன்றைய வாசகங்கள் இதை நோக்கியே கவனம் செலுத்துகின்றன. சீராக்கின் ஞானநூலில் பணிவுடன் செயல்படவேண்டும் என்று நாம் ஊக்குவிக்கப்படுகின்றோம். இதனால் அதிகமானக் கொடைகளைப் பெற்றவர்களைவிட நாம் அதிகமாக அன்புசெய்யப்படுவதற்கு இது தான் வழி. நாம் எவ்வளவுக்கு மனத் தாழ்மையோடு இருக்கின்றோமோ, அந்த அளவுக்கு நாம் கடவுளின் அருளை அளவின்றிப் பெறுவோம். நம்பிக்கைக்கு எதிராக இருக்கும் தடைகளை பணிவு நீக்குகிறது. பணிவு நம்மைக் கிறிஸ்துவின் போதனைகளுக்கும், திருஅவையின் மரபுகளுக்கும் நாம் திறந்த உள்ளத்தோடு இருப்பதைக் காட்டுகிறது. இது நாம் கடவுளின் அருளைப் பெற்றுக்கொள்ள தகுதியானவர்களாக நம்மை ஆக்குகின்றது. செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குகின்றார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுகின்றார் (யாக்கோபு 4:6) எனவே நாம் மீட்படைய மனத்தாழ்மை என்னும் நற்பண்பு தான் தேவை. இரண்டாம் வாசகத்தில் ஒரு திருச்சபை விழாக்கூட்டம் விண்ணகத்தில் நமக்கெனக் காத்துக்கொண்டிருக்கிறது என்று வாசிக்கின்றோம்.

இயேசு கூறிய உவமை கிறிஸ்தவ மனத்தாழ்மைக்கு ஒரு சிறந்த பாடம். நம்முடைய சமூகத்தில் நமக்கென ஒரு முக்கிய இடத்தைத் தரவேண்டுமென்று எண்ணாமல், மற்றவர்கள் நம்மை அங்கீகரிக்கப் பணிவுடன் காத்திருக்கவேண்டும். இதைத் தான் இயேசு, தன்னைத் தாழ்த்திக்கொள்கின்றவர், கடவுளின் பார்வையில் பெரியவர் என மதிக்கப்படுவர் என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார். இதுபோன்ற போதனையை இயேசுவைப் பின்பற்றுபவர்கள் கேட்பது இது முதல் முறையும் அல்ல. கடைசியும் அல்ல. இதற்கு அவரே முன்மாதிரியும் காட்டுகிறார். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்,.. என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் (மத்தேயு: 11:29) நம் அன்னை மரியாவும், மனத்தாழ்மையின் உருவமாக இருக்கிறார்.

திருப்பாடல் ஆசிரியர் மகிழ்வது போல, நாமும் ஆண்டவர்முன் மகிழ்ச்சியால் பாடுவோம். ஆண்டவர் நல்லவர், ஏழைகளுக்கும் தேவையில் இருப்போருக்கும் ஆண்டவர் உறைவிடம் அமைத்துத் தந்தார். இன்றைய நற்செய்தியில் இயேசு மேலும் கூறுகிறார். சமூகத்தின் விளிம்பு நிலையில் இருப்போருக்கும், நமக்குத் திருப்பிச் செலுத்த இயலாதோருக்கும் சென்று உதவுமாறு கூறுகிறார். இந்த உலகில் நமக்குத் திரும்ப செலுத்தக்கூடியவர்களுக்கு நாம் தரவேண்டாம். ஆண்டவரின் விண்ணக விருந்தில் அமரக்கூடிய அந்தப் பரிசையே நாம் எப்போதும் தேடவேண்டும். அதுவே நம்முடைய மீட்பு.

இன்றைய வாசகங்கள்:

சீராக்கின் ஞானநூல்: 3: 17-20, 28-29;

திபா: 68: 4-7, 10-11;

எபி: 12: 18-19, 22-24;

லூக்: 14: 1, 7-14;

INTERNAL CIRCULATION ONLY
BUL 35/2022

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

28 ஆகஸ்ட் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 22 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா (ஆகஸ்ட் 15)

கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிவதே மனத்தாழ்மை

மனத்தாழ்மையைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. வெளியுலக வாழ்க்கையைக் காட்டிலும், கிறிஸ்துவர்களுக்கு உரிய நற்குணமாக மனத்தாழ்மை அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. கிறிஸ்தவ அர்த்தத்தில், பெருமைக்கு மாறானது, அகந்தை மற்றும் ஆணவத்திற்கு எதிராக மனத்தாழ்மை பார்க்கப்படுகிறது.